<u>**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**</u>

<u>**OS.NO.414/2021**</u> **தேதி.09.09.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 09.09.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | | திரு.கோதண்டன் | இனம் | ஆண் |
| த/பெ. | | திரு.குப்ப பிள்ளை | ஊர்/வட்டம் | பிஞ்சி இராணிப்பேட்டை/வாலாஜா |
| வயது | | 70/2025 | தொழில் | கூலி |

துவக்க நேரம் 03.00 PM

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள எழுத்துமூல சாட்சியத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்துவிட்டுதான் கையெழுத்து போட்டே என்றால் ஆமாம். பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கமானவர் என்றால் பிரதிவாதி, கடை வைத்துள்ளார் அங்கு போக, வர எனக்கு பழக்கம். எத்தனை வருடங்களாக பிரதிவாதியுடன் பழக்கம் என்றால் 5 வருடங்களாக பழக்கம்.

2. பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் அவர் கடைக்கு போக, வர பழக்கம். வாதி சொல்லிதான் இந்த வழக்கில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் இல்லை. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம்.

3. பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நிலையில் பணத்தாள்கள் எந்த பண மதிப்பில் இருந்தது என்றால் ரூ.500 பண மதிப்பில் 7 கட்டு

கொடுத்தார், அதன் மொத்த தொகை ரூ.3,50,000/- ஆகும். வாதிக்கு இவ்வளவு தொகை எப்படி வந்தது என்றால் பணம் கொடுக்கவேண்டும் வா என்று அழைத்துச்சென்றார்கள், பணம் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. நான் யார் என்று பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும், வாதிக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. பிரதிவாதி, வாதியிடம் சீட்டு கட்டிவந்தார் என்றாலும், சீட்டு பணம் எடுக்கும்பொழுது பிணையத்திற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள கடனுறுதிச் சீட்டை வாதியிடம் கொடுத்தார் என்றாலும், வாதியிடமிருந்து நான் சொல்லும் தொகையை கடனாக பெறவில்லை என்றாலும்,சீட்டு நிலுவை தொகை ரூ.1,00,000/-க்காக கொடுக்கப்பட்ட கையெழுத்து மட்டும் போட்டு வெற்று கட்னுறுதிச் சீட்டை ஒப்படைத்திருந்த நிலையில், அதனை பயன்படுத்தி வெற்று கடனுறுதிசீட்டில் ரூ.3,50,000/- பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், வாதிக்காக இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் தொகையை பிரதிவாதி வாங்கவில்லை என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

முடிவு நேரம் 03.15 PM

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.